# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No.19/2024**

அ.சா.3

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | கரண் | Caste: | |
| Father's Name: | ராமு | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 01.07.2025

( 1 முதல் 3 எதிரிகள் ஆஜர்படுத்தப்பட்டனர் .)

**முதன்மை விசாரணை**

நான் அபிராமம் பள்ளப்பச்சேரி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் சென்டிரிங் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 தாமரைச் செல்வியைத் தெரியும். அ.சா.2 முருகவேல் மற்றும் சாட்சி பட்டியல் சாட்சி 4 முனீஸ்வரியைத் தெரியும். முனீஸ்வரி என் அம்மா. ஆஜர் எதிரிகளைத் தெரியும். இதற்கு முன் நான் பார்த்துள்ளேன். கடந்த 29.01.2024 ம் தேதி காலை 10.00 மணியளவில் நானும் என் அம்மாவும் கீழராமநதியில் ஆடு வாங்குவதற்காக இருசக்கரவாகனத்தில் சென்றோம். நாங்கள் போகும்போது கமுதி குண்டாறு பாலத்திற்கு அருகே அ.சா.1 தாமரைச் செல்வியையும், அ.சா.2 முருகவேலையும் பார்த்தோம். அவர்கள் இருவரும் ஒரு இருசக்கர வாகனத்தில் வந்தார்கள். அ.சா.1 தாமரைச் செல்வியிடம் எங்கு செல்கிறீர்கள் என கேட்டபோது தனக்கு குடலிறக்கம் உள்ளதாகவும், அதற்காக அருப்புக்கோட்டையில் உள்ள ஜெயந்தி மருத்துவமனைக்கு செல்வதாகவும் கூறினார். கமுதி அரசு

மருத்துவமனை அருகே டீ சாப்பிடலாம் என அவர்கள் இருவரையும் அழைத்து டீ சாப்பிட்டோம். தாமரைச் செல்வி மற்றும் முருகவேல் எங்களை எங்கு செல்கிறீர்கள் என கேட்டார்கள் நாங்கள் ஆடு வாங்குவதற்கு கீழ ராமநதிக்கு செல்வதாக சொன்னோம். 10.45 மணி ஆகிவிட்டதால் நாங்கள் டைம் ஆகிவிட்டது செல்கிறோம் என கிளம்பிவிட்டோம். அவர்கள் முன்னே செல்ல நாங்கள் பின்னே செல்லும்போது கமுதியிலிருந்து அருப்புக்கோட்டை செல்லும் ரோட்டில் இடைச்சியூரணி விலக்கில் உடைமரம் வெள்ளைச்சாமி கோவில் அருகே அவர்கள் நின்றபோது கேட்டதற்கு சிறுநீர் கழிக்க செல்வதாக சொன்னார்கள். நாங்கள் முன்னே செல்கிறோம். பின்னே வாருங்கள் என்று கூறிவிட்டு கீழ ராமநதிக்கு சென்றோம். நாங்கள் சென்றபோது உடைமரம் வெள்ளைச்சாமி கோவிலுக்கு எதிரே மூன்று நபர்கள் உள்ளே உட்கார்ந்திருந்தார்கள். அவர்கள் முயல் பிடிப்பதற்காக வந்திருப்பார்கள் என நினைத்து சென்றுவிட்டோம். ஒரு நபர் தாடியுடன் கருப்பு கலர் சட்டை அணிந்திருந்தார். மற்றொரு நபர் உயரமாகவும் வெள்ளை கலர் பூ போட்ட சட்டை அணிந்திருந்தார். மற்றொரு நபர் சிறுபையன் போல் இருந்தார். நீதிமன்றத்தில் பச்சை கலர் சட்டை அணிந்துள்ள 1வது எதிரியைக் காட்டி அவர்தான் சம்பவம் நடந்த அன்று கருப்பு கலர் சட்டை அணிந்திருந்ததாக கூறுகிறார். வெள்ளை கலர் பூ போட்ட சட்டை அணிந்திருந்த நபர் உயரமாக இருந்தார். நாங்கள் கீழ ராமநதி சென்று ஆட்டு வியாபாரியிடம் பேசிவிட்டு ஒரு மணி நேரம் கழித்து இடைச்சியூரணி உடைமரம் வெள்ளைச்சாமி கோவில் அருகே வந்தபோது என் அக்கா தாமரைச் செல்வி அழுதுகொண்டிருந்தார். நாங்கள் நிறுத்தி என்ன நடந்தது என கேட்டபோது நான் சிறுநீர் கழிக்க சென்றபோது அடையாளம்

தெரியாத பெயர் தெரியாத மூன்று நபர்கள் கத்தியை கழுத்தில் வைத்து மிரட்டி என் அக்கா பர்ஸில் வைத்திருந்த ரூபாய் 550/- ஐ எடுத்துக்கொண்டு பர்ஸை தூக்கி எறிந்துவிட்டதாக சொன்னார். என் அக்கா சத்தம்போட்டவுடன் ரோட்டில் நின்று கொண்டிருந்த முருகவேல் உள்ளே சென்றுள்ளார். அப்போது வெள்ளை கலர் பூ போட்ட சட்டை அணிந்திருந்த நபர் முருகவேலை பிடிடா அஜித் என பெயர் சொல்லி கூறியுள்ளார். முருகவேல் கழுத்தில் அஜித் கத்தியை வைத்து முருகவேல் பாக்கெட்டில் இருந்த ரூபாய் 3000/-யையும் எடுத்துள்ளார். அவர்கள் தாமரைச் செல்வி மற்றும் முருகவேலிடம் நீங்கள் எங்கே போகிறீர்கள் இங்கு என்ன வேலை என கேட்டபோது அருப்புக்கோட்டை மருத்துவமனைக்கு செல்வதாக என் அக்கா கூறியுள்ளார். அப்போது முருகவேலின் வாயை பொத்தி தனியாக கூட்டி சென்றுள்ளார்கள். என் அக்காவிடம் நீங்கள் என்ன ஜாதி என கேட்டுள்ளார்கள். அதற்கு என் அக்கா நாங்கள் பட்டியலின சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என கூறியுள்ளார். அந்த சமூகத்தில் என்ன ஜாதி என கேட்டுள்ளார்கள். அதற்கு என் அக்கா இந்து புதிரைவண்ணான் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என கூறியுள்ளார். இங்கு உன்னை என்ன செய்தாலும் யார் கேட்பது என கூறி அடித்துள்ளார்கள். அப்போது கருப்பு கலர் சட்டை போட்டவரும் வெள்ளை கலர் பூ போட்ட சட்டை போட்டவரும் என் அக்காவை கீழே தள்ளி மாறி மாறி கற்பழித்துள்ளார்கள். இங்க நடந்த விவரத்தை யாரிடமாவது கூறினால் கொலை செய்துவிடுவோம் என மிரட்டியுள்ளார்கள். அதன்பிறகு முருகவேலை என் அக்கா தாமரைச் செல்வி பக்கத்தில் நிற்க வைத்து முருகவேலை நெருக்கமான பழக்கத்தில் இருக்குமாறு மிரட்டி வீடியோ எடுத்துள்ளார்கள். நாங்கள் எப்போது கூப்பிட்டாலும் பணம்

தரவேண்டும், கூப்பிட்ட இடத்திற்கு வரவேண்டும் என்றும், அவ்வாறு செய்யவில்லை என்றால் எடுத்த வீடியோவை இணையத்தில் விட்டுவிடுவோம் என மிரட்டியுள்ளனர். என் அக்கா வீட்டிற்கு சென்று யோசித்து 31.01.2024 ம் தேதி கமுதி காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தார். 22.02.2024 ம் தேதி என் அக்கா தாமரை செல்வி போனில் என்னிடம் என்னை கற்பழித்த மூன்று நபர்களை போலிசார் பிடித்துவிட்டதாக சொன்னார். யார் யார் என்று கேட்டபோது அம்மன்பட்டி அஜித், மறக்குளம் பாலமுருகன், பசும்பொன் கிராமத்தைச் சேர்ந்த சூர்யா என கூறினார். இதுசம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>1 முதல் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>

எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர்கள் ஆஜர். குறுக்கு விசாரணை செய்யவில்லை. குறுக்கு விசாரணை செய்ய கால அவகாசம் கேட்டு மறுக்கப்பட்டது.

Sd/- C. Mohanram,
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No.19/2024**

அ.சா.4

Prosecution witness

| | |
|---|---|
| Name: முனீஸ்வரி | Caste: |
| Father's Name: | Calling: |
| Village: | Religion: |
| Taluk: | Age: |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 01.07.2025

( 1 முதல் 3 எதிரிகள் ஆஜர்படுத்தப்பட்டனர் .)

**முதன்மை விசாரணை**

நான் அபிராமம் பள்ளப்பச்சேரி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 தாமரைச் செல்வியைத் தெரியும். அ.சா.2 முருகவேல் , அ.சா.3 கரண் ஆகியோர்களைத் தெரியும். அ.சா.3 கரண் என் மகன். நான் இந்து புதிரை வண்ணான் சாதியைச் சேர்ந்தவர். ஆஜர் எதிரிகளை நான் இதற்கு முன்பு பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். கடந்த 29.01.2024ம் தேதி காலை 10.45 மணியளவில் கமுதி முதல் அருப்புக்கோட்டை செல்லும் ரோட்டில் இடைச்சியூரணி விலக்கு ரோடு அருகே உடைமரம் வெள்ளைச்சாமி கோவில் அருகே வைத்து பார்த்தேன். நானும் என் மகனும் அபிராமத்திலிருந்து கீழ ராமநதிக்கு ஆடு வாங்க செல்வதற்காக இருசக்கர வாகனத்தில் சென்றோம். தாமரைச் செல்வியின் ஊர் நெறிஞ்சிப்பட்டி. நாங்கள் செல்லும்போது எங்களுக்கு முன்னே இருசக்கர வாகனத்தில் முருகவேல் ஓட்டிச் சென்ற பைக்கில் தாமரைச் செல்வி

சென்று கொண்டிருந்தார். நாங்கள் அவர்கள் இருவரையும் கமுதி குண்டாறு பாலத்திற்கு அருகே வைத்து பார்த்தோம். அவர்கள் எங்களைப் பார்த்து எங்கு செல்கிறீர்கள் என கேட்டார்கள். நாங்கள் கீழராமநதிக்கு ஆட்டு வியாபாரியைப் பார்ப்பதற்காக செல்வதாக கூறினோம். நீங்கள் எங்கு செல்கிறீர்கள் என நாங்கள் கேட்டபோது குடலிறக்கத்திற்காக அருப்புக்கோட்டையில் உள்ள மருத்துவமனைக்கு செல்வதாக கூறினார்கள். நாங்கள் முன்னும் பின்னுமாக செல்லும்போது உடைமரம் வெள்ளைச்சாமி கோவில் அருகே அவர்கள் வண்டியை நிறுத்தினார்கள். ஏன் நிறுத்துகிறீர்கள் என கேட்டபோது சிறுநீர் கழிக்க வேண்டும் என சொன்னார்கள். நாங்கள் ஆட்டு வியாபாரியைப் பார்க்க நேரமாகிவிட்டதால் நாங்கள் முன்னே செல்கிறோம் என கூறிவிட்டு சென்றோம். அந்த இடத்தை விட்டு சற்று தள்ளி சென்றபோது ஆஜர் எதிரிகள் மூவரும் ரோட்டிற்கு அருகில் உட்கார்ந்திருந்தார்கள். நாங்கள் கீழராமநதி சென்று ஆட்டு வியாபாரியை பார்த்துவிட்டு 12.30 மணியளவில் மீண்டும் தாமரை செல்வி சிறுநீர் கழிப்பதற்காக நின்ற இடத்திற்கு வந்தோம். அப்போது முருகவேலும் தாமரைச் செல்வியும் அங்கு அழுதுகொண்டிருந்தார்கள். என்னவென்று விசாரித்தபோது சிறுநீர் கழிக்க சென்றபோது ஆஜர் எதிரிகள் கத்தியை வைத்து தாமரை செல்வியை மிரட்டியபோது தாமரைச் செல்வி சத்தம் போட்டுள்ளார். சத்தம் கேட்டு முருகவேல் ஓடியபோது வெள்ளை சட்டை போட்ட நபர் அஜித் கத்தியை எடுத்து ஓடிவரும் நபரை மறைடா என கூறியுள்ளார். கருப்பு சட்டை போட்டிருந்த அஜித் வெள்ளை பூ போட்ட சட்டை நபரிடம் முருகவேலை பார்த்துக்கொள்ளும்படி கூறிவிட்டு தாமரைச் செல்வியிடம் அஜித் சென்று தாமரை செல்வியை கீழே தள்ளிவிட்டு அவரது சட்டை பைக்குள் இருந்த ரூபாய் 550/-ஐ

எடுத்துள்ளார். பிறகு நீ என்ன ஜாதி என கேட்டுள்ளார். அதற்கு தாமரை செல்வி நாங்கள் பட்டியலின ஜாதி என கூறியுள்ளார். அதற்கு பட்டியலினத்தில் நிறைய ஜாதிகள் உள்ளது நீங்கள் என்ன ஜாதி என கேட்டுள்ளார். அதற்கு தாமரை செல்வி நாங்கள் புதிரை வண்ணான் சாதியை சேர்ந்தவர்கள் என கூறியுள்ளார். பிறகு முருகவேலிடம் இருந்த ரூபாய் 3000 பணத்தை அஜித் எடுத்துக்கொண்டதாக சொன்னார்கள். பணத்தை எடுத்த பிறகும் தாமரை செல்வியை கீழே தள்ளி அஜித் என்ற பையன் முதலில் கற்பழித்துள்ளான். பிறகு அஜித் முருகவேல் பக்கத்தில் நின்று கொண்டு வெள்ளை கலர் பூ போட்ட சட்டை போட்ட நபர் சென்று கற்பழித்துள்ளார். அதன்பிறகு தாமரை செல்வி மற்றும் முருகவேல் ஆகிய இருவரையும் நீங்கள் இந்த இடத்திற்கு தப்பு செய்ய வந்துள்ளீர்கள் என கூறி அவர்கள் இருவரையும் வீடியோ எடுத்துள்ளார்கள். வீடியோ எடுத்தபிறகு நாங்கள் கேட்கும்போதெல்லாம் பணம் கொடுக்க வேண்டும், இல்லை என்றால் வீடியோவை இணையத்தில் விட்டுவிடுவோம் எனவும் கொன்றுவிடுவோம் எனவும் மிரட்டியுள்ளார்கள். அதன்பிறகு நாங்கள் அனைவரும் ஊருக்கு சென்றுவிட்டோம். அ.சா.1 தாமரை செல்வி என் அக்கா மகள். அதன்பிறகு யோசித்துவிட்டு 31.01.2024 ம் தேதி கமுதி காவல்நிலையம் சென்று தாமரை செல்வி புகார் கொடுத்ததாக என்னிடம் சொன்னார். நாங்கள் நடந்த சம்பவத்தை வெளியில் கூறினால் அசிங்கம் என்பதால் உடனே புகார் கொடுங்கள் என தாமரை செல்வி மற்றும் முருகவேலிடம் சொல்லவில்லை . தாமரை செல்வி மற்றும் முருகவேலும் விசயம் தெரிந்தால் அசிங்கம் என உடனே புகார் கொடுக்கவில்லை. பிறகு தாமரை செல்வி தானாக யோசித்து 31.01.2024 ம் தேதி புகார் கொடுத்ததாக

சொன்னாள். புகார் கொடுத்த மறுநாள் எங்கள் ஊருக்கு வந்து என் வீட்டில் வைத்து கமுதி போலிசார் விசாரித்தார்கள்.

1 முதல் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:—

எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர்கள் ஆஜர். குறுக்கு விசாரணை செய்யவில்லை. குறுக்கு விசாரணை செய்ய கால அவகாசம் கேட்டு மறுக்கப்பட்டது.

Sd/- C. Mohanram,
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)